என்ன பதில் கூறுவார் ?

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

வெளியீடு :
திராவிட முன்னேற்றக் கழகம்
" அண்ணா அறிவாலயம்"
367 & 369 , அண்ணா சாலை,
சென்னை - 600 018.

முதற்பதிப்பு : ஜூலை 2010

34795
894.811582
மன்னை

விலை : ரூ. 5/-

அச்சிட்டோர் :
ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 14.

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு சட்டப் பேரவை பொதுத் தேர்தல் முடிந்த பிறகு – கடந்த நான்காண்டு காலமாக கொடநாடு எஸ்டேட்டிலும் – சிறுதாவூர் மாளிகையிலும் காடாறு மாதம், நாடாறு மாதம் என்பதைப் போல ஓய்வெடுத்துக் கொண்டு – அன்றாடம் யாரோ எழுதும் அறிக்கைகளிலே கையெழுத்திட்டுக் கொடுப் பதையே தன்னுடைய அரசியல் பணியாகக் கொண்டு காலம் தள்ளிய எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா – அடுத்த ஆண்டு தேர்தல் வரப்போகிறது என்றதும் – நாடகத்தின் துவக்கத்திலே "அகோ வாரும் பிள்ளாய்" என்பதைப் போல பேச்சு என்ற பெயரால் ஒரு நீண்ட கட்டுரையை எழுதிக் கொடுக்கச் சொல்லி – கோவையிலே கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி – அந்தக் கூட்டத் திலே ஒரு மணி நேரத்திற்கு மேலாக அதனை மூச்சு விடாமல் படித்திருக்கிறார்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை அனைத்துலக நாடுகளின் நல்லறிவாளர்களை யும், ஆன்றோர், சான்றோர், அறிஞர்களையும் கொண்டு கோவையிலே நடத்தி – உலகத் தமிழர்களையெல்லாம் அங்கே ஒன்று கூட்டி – இலட்சக்கணக்கான மக்கள் ஐந்து நாட்கள் தங்கி முக்கியமான தீர்மானங்களையும் முடிவு களையும் எடுத்த

காரணத்தால் – கோவை மாநகரையே தங்கள் கண்டனப் பொதுக் கூட்டத்திற்குரிய இடமாகத் தேர்ந்தெடுத்து – தமிழகமெங்குமிருந்து கட்சிக்காரர்களை யெல்லாம் அங்கே அழைத்து வந்து ஜெயலலிதா முழங்கியிருக்கிறார். அது அவர்களுடைய கட்சி வளர்ப்புப் பணி என்றபோதிலும் – அங்கே அவர் எழுப்பிய பல ஆதாரமற்ற உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் முறையான விளக்கங்களை அளிக்க வேண்டியது அரசுப் பொறுப்பிலே உள்ளவர்களின் கடமை என்ற உணர்வோடு – ஜெயலலிதா எழுப்பிய குற்றச் சாட்டுகள் எல்லாம் எப்படிப்பட்டவை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவும் – அதே நேரத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஆட்சிப் பொறுப்பிலே உள்ள கழக அரசு செய்த சாதனைகளின் தொகுப்பையும் விளக்கிட விரும்புகின்றேன்.

முதலாவதாக ஜெயலலிதா கடந்த நான்காண்டு காலமாக வெளியிட்ட அறிக்கை களில் எல்லாம் தி.மு. கழக அரசை "மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி" என்றே வர்ணித்து வந்திருக்கிறார். கோவை பேச்சிலும் அதனையே இரண்டு மூன்று இடங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார். தி.மு. கழக அரசு மைனாரிட்டி ஆட்சி என்றால், ஜெயலலிதாவுக்கு தைரியம் இருந்திருக்குமேயானால் – கழக அரசு மீது ஒரு நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து தனது மெஜாரிட்டியை நிரூபித்திருக்க வேண்டியதுதானே? அதற்கு

வக்கற்ற ஜெயலலிதாவுக்கு மைனாரிட்டி தி.மு.க. அரசு என்று சொல்வதற்கு எந்த அருகதையாவது உண்டா என்பதை தமிழ்நாட்டு மக்களே நீங்களே புரிந்து கொள்ளுங்கள்!

அடுத்து ஜெயலலிதா தனது பேச்சில், தி.மு.கழக ஆட்சியில் தமிழ்நாடு வளர்ச்சி அடையவில்லை, தமிழ் மொழி வளர்ச்சி அடையவில்லை, தமிழர்களும் வளர்ச்சி அடைய வில்லை என்கிறார். இது உண்மையா?

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு துறைக்கும் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கப் பட்டது, தற்போது இந்த ஆண்டு அந்தந்த துறைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பதை ஒப்பிட்டுக் காட்டினாலே தமிழ்நாடு வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்பதை சுலபத்தில் புரிந்து கொள்ளலாம்.

- உதாரணமாக வேளாண்மைக்கு 2005–2006 இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 801 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 1836 கோடி ரூபாய்.

- ஊரக வளர்ச்சித் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 2828 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 5665 கோடி ரூபாய்.

- பள்ளிக் கல்வித் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 4110 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 9148 கோடி ரூபாய்.

- சமூக நலத் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 654 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 2167 கோடி ரூபாய்.

- உயர் கல்வித் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 745 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 1463 கோடி ரூபாய்.

- மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 2005–2006 இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 1487

கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 3391 கோடி ரூபாய்.

• ஆதிதிராவிடர் நலத்துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 487 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 876 கோடி ரூபாய்.

• நெடுஞ்சாலைத் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 2381 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 4383 கோடி ரூபாய்.

• காவல் துறைக்கு 2005–2006இல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு 1346 கோடி ரூபாய். 2009–2010இல் கழக ஆட்சியில் இந்தத் துறைக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடு 2855 கோடி ரூபாய்.

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் துறை களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகப்படுத்தப் படுவது முறைதான் என்ற போதிலும் – கழக ஆட்சியில் நான்காண்டு காலத்தில் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைப் பார்த்தாலே தமிழ்நாடு

எத்தகைய வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதை விவரம் புரிந்தவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

2006ஆம் ஆண்டிற்குப் பிறகு கோவை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில் நான்கு புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் – ஓரத்தநாடு, பெரம் பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், பெண்ணா கரம், திருப்பத்தூர் (வேலூர்), வேதாரண்யம் ஆகிய 14 இடங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் – விழுப்புரம், திருவாரூர், தர்மபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகள் – திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணா மலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள் – பத்தாம் வகுப்பு வரை பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடமென சட்டம் – தமிழ்மொழியை செம்மொழியாக ஆக்கியது – சென்னையிலே செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய நான்கு நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்வு – அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் போன்ற திட்டங்கள் எல்லாம் தமிழ்நாடும், தமிழ்

மொழியும், தமிழர்களும் வளராததற்கான அடையாளங்களா என்பதை ஆத்திரக்கார ஜெயலலிதாதான் விளக்க வேண்டும்.

ஜெயலலிதா தனது பேச்சில் விவசாய உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது; ஏன் குறைந்துள்ளது? பாசனத்திற்கு தண்ணீர் இல்லை. அண்டை மாநிலங்களில் இருந்து நமக்கு வரவேண்டிய தண்ணீர் வரவில்லை, காவேரி தண்ணீரைப் பெற முயற்சிக்கவில்லை, அதற்குக் காரணம் கருணாநிதியின் குடும்பத் தினர் அங்கே தொழில் நடத்திக் கொண்டிருப்பது தான், கர்நாடக அரசை வற்புறுத்தினால் கருணாநிதியின் குடும்பத்தினரின் தொழில் பாதிக்கும் என்பதால் தண்ணீர் கேட்கவில்லை என்றெல்லாம் வியாக்கியானம் செய்திருக்கிறார். நான் கேட்கிறேன், என்னுடைய குடும்பத்தினர் கர்நாடகாவிலே தொழில் நடத்துவதற்கும், கர்நாடக அரசிடம் தண்ணீர் கேட்பதற்கும் என்ன தொடர்பு என்று ஜெயலலிதா கூறுகிறார்?

உண்மையில், விவசாயப் பொருள் உற்பத்தி ஜெயலலிதா ஆட்சியில்தான் குறைந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு ஆண்டுக்கு ஆண்டு உற்பத்தி அதிகரித் துள்ளது. பொதுமக்கள் உண்மை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக விவசாயப் பொருள்கள் உற்பத்தி தொடர்பான சில விவரங்களை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

- 2000–2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்த உணவு உற்பத்தி 86 இலட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன்; ஆனால் 2001 இல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபின் மொத்த உணவு உற்பத்தி 2001–2002இல் 76 இலட்சத்து 89 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2002–2003 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 44 இலட்சத்து 61 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2003–2004 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 43 இலட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2004–2005 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 61 இலட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2005–2006 இல் அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 61 இலட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன்;

இவ்வாறு அ.தி.மு.க. ஆட்சி செய்த 5 ஆண்டு காலங்களிலும் உணவு உற்பத்தி மிகவும் குறைவாகவே இருந்தது. இந்த உணவு உற்பத்தி ஜெயலலிதா ஆட்சியிலே குறைந்ததற்கான காரணம்; அவர் அண்டை மாநிலங்களிலிருந்து குறிப்பாக காவேரியிலிருந்து ஒழுங்காக

நீரைப் பெற்றுத் தராததுதான் என்றும், அவர் பூர்வீகமாக கர்நாடகாவைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் அந்த அரசிடம் அப்போது காவேரி தண்ணீருக்காக வலியுறுத்த வில்லை என்றும், அதனால்தான் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி குறைந்தது என்றும் ஜெயலலிதா பாணியிலேயே அவர் சொன்னதை வைத்தே தற்போது யாராவது குற்றஞ்சாட்டலாம் அல்லவா?

ஜெயலலிதா அற்பத்தனமாக எதற்கெடுத் தாலும் என்னுடைய குடும்பம், என்னுடைய உறவினர்கள் என்றெல்லாம் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார். என்ன செய்வது? எனக்கென்று ஒரு குடும்பம் இருந்து தொலைந்துவிட்டது. அந்தக் குடும்பத்திலே உள்ள சிலர் அரசியலிலே இருக்கிறார்கள், சிலர் தொழிலிலே ஈடுபட்டுள்ளார்கள். அரசியலிலே இருந்தாலும் தவறு, தொழிலிலே ஈடுபட்டாலும் தவறு என்றால் அந்தக் குடும்பத்தினரை என்ன தான் செய்வது? ஜெயலலிதாவைப் பொறுத்த வரை அவருக்குச் சொந்தக் குடும்பம் என்று இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு குடும்பத்தை தன் குடும்பமாக ஆக்கிக் கொண்டு அந்தக் குடும்பத்தினரை வளர்ப்பதிலே அக்கறை காட்டிடவில்லையா? அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாநிலங்கள் அவை உறுப்பினர் கொடுக்கவில்லையா? அந்தக் கட்சியின் முன்னணித்

தலைவராக ஆக்கிட வில்லையா? அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை வளர்ப்பு மகன் என்று கூறி – அவரது மணவிழாவை மாநாடுபோல நடத்த வில்லையா?

2006இல் மீண்டும் தி.மு.க. அரசு அமைந்த பிறகு இந்த அரசு வழங்கிய 7000 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி, வட்டி இல்லாத பயிர்க்கடன், நெல், கரும்பு ஆகிய விளைபொருள் களுக்கு ஊக்கத் தொகை யுடன் கூடுதல் விலை வழங்கியது, விவசாயி களுக்கான பண்ணை சாரா கடன்களுக்கும் வட்டி தள்ளுபடி செய்யப் பட்டது போன்ற பல்வேறு சலுகைகள் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு உணவு உற்பத்தி அதிகரித்து வந்துள்ளது என்பதனை பின்வரும் விவரங்கள் தெளிவுபடுத்தும்.

- 2006–2007இல் உணவு உற்பத்தி 82 இலட்சத்து 64 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2007–2008இல் உணவு உற்பத்தி 84 இலட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2008–2009இல் உணவு உற்பத்தி 91 இலட்சத்து 11 ஆயிரம் மெட்ரிக் டன்;

- 2009–2010இல் உணவு உற்பத்தி 95 இலட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் டன்;

எனப் படிப்படியாக உயர்ந்து மகத்தான சாதனை தான் படைத்துள்ளதே தவிர, ஜெயா கோவை யிலே உளறியிருப்பதைப் போல விவசாய உற்பத்தி குறைந்து விடவில்லை என்பதை இந்தப் புள்ளி விவரங்களே தெளிவாக்கும்.

மொத்த உணவு உற்பத்தி என்ற அளவில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு வகை தானியத்திலும் குறிப்பாக நெல் உற்பத்தியை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட 2000–2001 தி.மு.க. ஆட்சி காலத்தில் நெல் உற்பத்தி 73 இலட்சத்து 66 ஆயிரம் டன் என இருந்தது, அதற்குப்பின் வந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 2001–2002இல் 65 இலட்சத்து 84 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2002–2003இல் 35 இலட்சத்து 77 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2003–2004இல் 32 இலட்சத்து 23 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2004–2005 இல் 50 இலட்சத்து 62 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும், 2005–2006இல் 52 இலட்சத்து 10 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும் குறைந்துவிட;

2006இல் அமைந்த கழக ஆட்சி விவசாயி களுக்கு அளித்த ஊக்கம் காரணமாக நெல் உற்பத்தி 2006–2007இல் 66 ஆயிரத்து 11 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து 2009–2010இல் 71 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் எனவும் உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

இதைப்போலவே, சிறு தானிய உற்பத்தி யிலும், பயறு வகைகள் உற்பத்தியிலும் அ.தி.மு.க. ஆட்சியைவிட கழக ஆட்சி காலத்தில்தான் உற்பத்திகள் அதிகரித்துள்ளன என்பதை புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்து கின்றன. உண்மை இவ்வாறு இருக்க பொய்மையே வடிவாக விளங்கக்கூடிய அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதா கோவையில் சொல்லியிருப்பது மொத்தம் புளுகு மூட்டை என்பதை உணர்ந்து கொள்ள மாட்டார்களா தமிழக மக்கள் ?

விவசாயப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் உரம் முக்கிய இடத்தை வகிக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான உரம் தமிழக விவசாயிகளுக்கு முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 20 முதல் 24 இலட்சம் மெட்ரிக் டன்கள் யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் காம்ப்ளெக்ஸ் உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

2001–2002 முதல் 2005–2006 வரை அ.தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுகளில் சராசரியாக 7.3 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 2.24 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. 2.94 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 3.54 மெட்ரிக் டன் காம்ப்ளெக்ஸ் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள் ளது. 2006–2007 முதல் 2009–2010 வரை கடந்த நான்காண்டு தி.மு.க. ஆட்சியில் சராசரியாக 9.88 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 3.43 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி., 4.99 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 3.93 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

2001–2002 முதல் 2005–2006 வரையிலான ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் விநியோகம் செய்யப்பட்ட உரங்களைவிட 2006–2007 முதல் 2009–2010 முடிய கடந்த நான்காண்டு தி.மு.க. ஆட்சியில் கூடுதலாக உர விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது யூரியாவில் 2.54 இலட்சம் மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 1.19 இலட்சம் மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரத்தில் 2.05 இலட்சம் மெட்ரிக் டன்னும் காம்ப்ளெக்ஸ் உரத்தில் 0.40 இலட்சம் மெட்ரிக் டன்னும்

கூடுதலாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளின் முக்கிய இடுபொருளான உரங்கள் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டு தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தியை மேம்படுத்துவதில் கழக அரசு கவனம் செலுத்தி யுள்ளது என்பதுதானே உண்மை!

முரசொலி
15.07.2010

அன்புள்ள,
மு.க.

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தனது கோபப் பேச்சிலே (மன்னிக்கவும்) கோவைப் பேச்சிலே பெரும் பகுதியினை விலைவாசி உயர்வு பற்றியும் – குறிப்பாக பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டது பற்றியும் அதனால் மற்ற பொருள்களின் விலைகள் உயருகின்றன என்றும் சொல்வதற்கே செலவிட்டிருக்கிறார். விலைவாசி உயர்வுக்கும், பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வுக்கும் முக்கிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் உண்டு என்பதும், மாநில அரசுக்கு ஓரளவுதான் பொறுப்பு உண்டு என்பதும் சாதாரண அரசியல்வாதிக்குக் கூட தெரிந்த ஒன்று. ஆனால் விலை உயர்வு பற்றியும், பெட்ரோலியப் பொருள்களின் உயர்வு பற்றியும் நீண்ட நேரம் பேசிய ஜெயலலிதா, அதற்குக் காரணமான மத்திய அரசு பற்றியோ, அந்த அரசின் முக்கியப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதை – முக்கிய நாளேடுகள் சில "ஜெயலலிதா தனது உரையில், காங்கிரசை விமர்சிக்கவே இல்லை, மத்திய அரசை விமர்சிப்பதையும் தவிர்த்தார்" என்று குறிப்பிட் டிருப்பதிலிருந்து – ஜெயலலிதாவின் உள்கிடக்கை என்ன என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாம் புரிந்து கொள்வதை விட – காங்கிரஸ் கட்சியோடு தி.மு.கழகம் தோழமை யாக இருப்பதால்தான், கழகத்தோடு உறவு

கொள்ள முடியாத நிலை என்று சொல்லிக் கொள்கிறார்களே நமது இடதுசாரி நண்பர்கள்; அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜெயலலிதா இடது சாரி நண்பர்களை ஏமாற்றுவதுகூட பிறகு இருக்கட்டும் – அவருடைய கட்சித் தொண்டர்களையே ஏமாற்றுவதற்காக கோவையிலே பேசும்போது கூட்டணியைப் பற்றி அவரே கவனித்துக் கொள்வதாக உறுதியளித்திருக்கிறார். காங்கிரஸ் கட்சியையும், மத்திய அரசையும் விமர்சிப்பதைத் தவிர்த்திருக்கிறார். இப்படி யெல்லாம் செய்து இடதுசாரிகளை ஏமாற்ற நினைக்கலாம், கட்சித் தொண்டர்களை ஏமாற்றலாம். ஆனால் ஜெயலலிதா; திருமதி சோனியாகாந்தியைப் பற்றி பதிபக்தி இல்லாதவர், இந்தியாவை ஆளத் தகுதியற்றவர் என்றெல்லாம் விமர்சனம் செய்ததை காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவ்வளவு சுலபமாக மறந்திருக்கமாட்டார்கள்.

மாநில தி.மு. கழக அரசின் மீது முக்கிய விமர்சனமாக கோவையில் ஜெயலலிதா பேசியிருப்பது "மனிதன் உணவு இல்லாமல் வாழ முடியாது, நீங்கள் எல்லோரும் உணவு சமைப்பதற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக அங்காடிக்குச் செல்கிறீர்கள். சாப்பிடுவதற்கு அரிசி மட்டும் இருந்தால் போதாது, பருப்பு

தேவைப்படுகிறது. உப்பு தேவைப்படுகிறது, மிளகாய் தேவைப்படு கிறது, மசாலா பொருட்கள் தேவைப்படுகின்றன, காய்கறிகள் தேவைப்படுகின்றன. இவற்றை சமைப்பதற்கு மண்ணெண்ணெய் அல்லது சமையல் எரிவாயுவும் தேவைப்படுகிறது. இந்தப் பொருட்களின் விலைகள் எல்லாம் கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு முதல் மூன்று மடங்கு வரை ஏறிவிட்டன" என்றதோர் பெரியகண்டு பிடிப்பினை எழுதிக் கொடுத்தபடி அதனை அந்தக் கூட்டத்திலே படித்திருக்கிறார்.

விலைவாசி உயர்வு என்பது வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் பொதுவாக எல்லா நாடுகளிலும் உள்ள ஒன்றுதான். இந்த விலைவாசி உயர்வு தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவின் பல மாநிலங்களிலும், ஏன் உலக அளவிலும் இருந்து கொண்டுதான் உள்ளது. விலைவாசி உயர்கின்ற அதே நேரத்தில் மக்களின் வாங்கும் சக்தியும் பெருகிக் கொண்டு வருகிறது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் சாதாரண, சாமானிய ஏழைமக்கள் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 15.9.2008 ல் இருந்து, ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் என இந்தியா விலேயே மிகக்

குறைந்த விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது.

பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் விலைகள் உயரும் போக்கைக் கூர்ந்து கண்காணித்து, 2007 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்தே துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை மானிய விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிச் செயல்படுத்தி வருகிறது. இதற்காக, துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தும் பிற மாநிலங்களிலிருந்து வாங்கியும் இப்பொருள்களின் சீரான விநியோகம் தமிழகத்திலே உறுதி செய்யப்பட்டுள்ளது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றுக்கு மதிப்புக் கூட்டு வரி விலக்கும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 'மலிவு விலையில் மளிகைப் பொருள்' வழங்கும் திட்டத்தின் கீழ், 10 மளிகைப் பொருள்கள் ரூபாய் 50க்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதையெல்லாம் மறந்து விட்டு சாப்பிடுவதற்கு பருப்பு தேவைப்படுகிறது, உப்பு தேவைப்படுகிறது என்று கோவையில் பேசியிருக்கிறார். கழக அரசின் சார்பில் மேலே தெரிவித்தவாறு விலைகள் குறைக்கப்பட்டிருப்பதை அவர் மறந்து விட்டாரா அல்லது மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறாரா ?

இவ்வாறு நமது நாட்டில் எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு, 2009–2010 ஆம் நிதியாண்டில் ரூபாய் 4,000 கோடி நிதி ஒதுக்கி, நியாயவிலைக் கடைகள் மூலம், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் உணவுப் பொருள்களை அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இந்த அரசு வழங்கி வருகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

பருப்பு வகைகள் மற்றும் சர்க்கரை ஆகிய வற்றின் விலை குறைந்து வருவதையும் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு உணவு மானியத்திற்காக ரூபாய் 3,750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விலைவாசி குறித்து பேசியிருக்கும் ஜெயலலிதா ஆட்சியின் இறுதி ஆண்டான 2005–2006இல் இதற்காக ஒதுக்கிய தொகை வெறும் 1,200 கோடி ரூபாய் மட்டுமே!

சர்க்கரையினுடைய விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக – சர்க்கரை விலை உயர்வு ஏற்பட்ட நிலையில், கணிசமாக உயர்ந்த உணவு மானியத்தைப் பொருட்படுத்தாமல் – மத்திய அரசு 10,832 டன் சர்க்கரையை மட்டும் லெவி விலையில் வழங்கினாலும்; கூடுதலாக மக்களுக்குத் தேவைப்படும் சர்க்கரையை வெளிச் சந்தை விலையிலே வாங்கி, மாதம் 34,000 டன் அளவு சர்க்கரையை

கிலோ ரூபாய் 13.50 என்ற விலையிலேயே அனைத்து அட்டை தாரர்களுக்கும் இந்த அரசு வழங்கிவருகிறது.

இந்த ஆட்சியிலே விலைவாசி உயர்வு என்று பேசுகின்ற ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே விலைவாசி விவரம் என்ன ?

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்ற 2001ஆம் ஆண்டு பொன்னி புழுங்கல் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு 14 ரூபாய் என்றி ருந்தது – அவரது ஆட்சிக் காலத்திலேயே 2005ஆம் ஆண்டு 20 ரூபாய் அளவிற்கு உயர்ந்தது.

2001 ஆம் ஆண்டு ஜெயா ஆட்சிக் காலத்தில் துவரம் பருப்பு கிலோ விலை 27 ரூபாய் என்றிருந்தது, 2004ஆம் ஆண்டு 33 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது.

கடலை எண்ணெய் 2001ஆம் ஆண்டு ஜெயா ஆட்சியில் கிலோ ரூபாய் 38 என்றிருந் தது, அதே ஜெயா ஆட்சியில் 2003ஆம் ஆண்டிலேயே 56 ரூபாயாக விலை உயர்ந்தது.

நல்லெண்ணெய் 2001இல் 34 ரூபாயாக இருந்தது, 2003இல் 65 ரூபாயாக உயர்ந்தது. தேங்காய் எண்ணெய்

2001இல் 45 ரூபாயாக இருந்தது, 2005இல் 88 ரூபாயாக உயர்ந்தது.

புளி 2001இல் கிலோ 22 ரூபாயாக இருந்தது, 2005இல் 41 ரூபாயாக உயர்ந்தது. இவ்வாறு ஜெயலலிதா ஆட்சியிலும் விலைவாசி ஆண்டுக் காண்டு உயர்ந்து கொண்டுபோனது. நான் அதனைத் தவறு என்று சொல்லவில்லை. இவ்வாறு விலை உயர்ந்து கொண்டு போன போது – இப்போது தி.மு. கழக அரசு விலையைக் குறைக்க எடுத்துள்ள நடவடிக்கை போல விலைவாசி யைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஏதாவது இந்த அம்மணியின் ஆட்சியிலே எடுக்கப்பட்டது உண்டா?

இன்னும் சொல்லப் போனால் கழக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக ஒரு சில அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைந்து வருகிறது என்பதை இரண்டு நாட்களுக்கு முன்பு நடுநிலை நாளேடு ஒன்றில் வெளிவந்த விவரத்தை அப்படியே தெரிவிக்க விரும்புகிறேன். அந்தச் செய்திக்கு தலைப்பே "பருப்பு, எண்ணெய் விலைகள் தொடர்ந்து சரிவு – இல்லத்தரசி களுக்கு ஆறுதல்" என்பதாகும். அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு:–

• "விலை உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம், மறியல் உள்ளிட்ட போராட்டங்கள் நடந்தன. ஆன் லைன் பதுக்கலுக்கு மத்திய அரசு தடை விதித்ததோடு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் அனுமதி வழங்கியது. இதையடுத்து, அத்தியாவசியப் பொருள்களின் விலை கள் ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளன.

• கிலோ 100 ரூபாய்க்கு விற்ற துவரம் பருப்பு 65 ரூபாயாகக் குறைந்தது.

• சர்க்கரை விலையும் 30 ரூபாய்க்கு இறங்கியது. .

• கடந்த மாதம் குவிண்டால் 6,900 ரூபாய்க்கு விற்ற முதல் ரக துவரம் பருப்பு 6,200 ஆகவும், இரண்டாம் ரகம் 6,500 லிருந்து 5,700 ரூபாயாகவும் குறைந் துள்ளது.

• முதல் ரக உளுத்தம் பருப்பு குவிண் டால் 8000 லிருந்து 7600 ரூபாயாகக் குறைந்துள்ளது. சில்லரையில் முதல் ரகம் 79 ரூபாய்க்குக் கிடைக்கிறது. கடந்த மாதம் முதல் ரக பாசிப் பருப்பு, குவிண் டால் 9,400 லிருந்து 8000 ரூபாயாகக் குறைந்துள்ளது. கடந்த வாரம் 44க்கு விற்ற பாமாயில் 42 ரூபாய், சன் பிளவர் எண்ணெய் 52 லிருந்து 49, அக்மார்க்

நல்லெண்ணெய் கிலோ 110 லிருந்து 105, தேங்காய் எண்ணெய் கிலோ 75லிருந்து 70 என குறைந்துள்ளது.”

எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா இந்தச் செய்திகளையெல்லாம் மறைத்து விட்டு கோவையிலே விலைவாசி உயர்வு பற்றி நீண்ட நேரம் பேசி, அதற்குக் காரணம் கழக அரசுதான் என்று பேசியிருக்கிறார்.

அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையிலும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக துவரம்பருப்பின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 26.67 சதவிகித அளவிற்கும், மிளகாய் 22.22 சதவிகித அளவிற்கும், மல்லி 20.83 சதவிகித அளவிற் கும், கடுகு 16.67 சதவிகித அளவிற்கும் என பல பொருள்களின் விலை குறைந்துள்ளது என்பதையும் நான் சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

அரிசி மட்டும் வழங்கினால் போதாது என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்த அரசைப் பொறுத்தவரையில் அரிசி மட்டும் வழங்கப்பட வில்லை. மக்களை விலைவாசி தாக்கத்திலிருந்து காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும் பொறுப்புணர் வோடும்

ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும், மேலும் பாமாயிலும், பத்து பொருட்கள், அதாவது, மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லி தூள், கடலை பருப்பு, வெந்தியம், கடுகு, சோம்பு அல்லது வெள்ளை உளுத்தம் பருப்பு, சீரகம், மிளகு, பட்டை, இலவங்கம் அல்லது கரம் மசாலா, ஆகிய பொருட்கள் அடங்கிய ஒரு பொட்டலமும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1.80 கோடி பொட்ட லங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலவச எரிவாயு இணைப்புத் திட்டத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டு முதல் 2009–2010ஆம் ஆண்டு வரையில் ரூ. 521.45 கோடி செலவில் 23 இலட்சம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகளும் வழங்கப்பட் டுள்ளன. 2010–2011ஆம் ஆண்டில் ரூ. 140 கோடி செலவில் 6 இலட்சம் இலவச எரிவாயு இணைப் புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

பொதுவிநியோகத் திட்டத்தில் வழங்குவதற்காக மத்திய அரசு மாதந்தோறும் மத்தியத் தொகுப்பிலிருந்து 2.96 இலட்சம் டன்கள் அரிசி வழங்கி வருகிறது. இந்த அரிசி நிர்ணயிக்கப் பட்ட தரத்திலேயே உள்ளது என்பதை பரிசோதித்த பின்னரே பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர்,

திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் அரவை செய்யப்பட்டு மத்திய தொகுப்பிற்கு ஈடு செய்யும்போதும் நிர்ணயிக்கப்பட்ட தரம் பரிசோதிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படுகிறது. எனவே, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி தரம் குறைந்த அரிசி அல்ல. ஒவ்வொரு நாளும் இந்த அரிசியைப் பெற்று வயிறார பசியாறும் தமிழ்நாட்டு ஏழையெளிய மக்கள் அரிசியின் தரம் என்ன, அதைப்பற்றி விமர்சிக்கும் ஜெயலலிதாவின் தரம் என்ன என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்.

முரசொலி **அன்புள்ள,**

16.07.2010 **மு.க.**

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தனது கோயமுத்தூர் பேச்சில் "ஊழலின் ஊற்றுக்கண்" என்று நம்மைச் சொல்லியிருக்கிறார்.

வருமானத்துக்கு அதிகமாக ஊழல் செய்து 66 கோடி ரூபாய்க்குச் சொத்து சேர்த்து, அதற்காகவே ஏழாண்டு காலமாக ஜெயலலிதா மீது வழக்கு நடைபெறுகிறதே; அந்த வழக்கிலே, "நீதி பரிபாலன முறையின் புனிதத்தை யும், அதன் மீது சாதாரண மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நிலைநாட்ட இந்த வழக்கு விசாரணையை கர்நாடக மாநில நீதி மன்றத்திற்கு மாற்றுகிறேன்" என்று உச்ச நீதி மன்ற நீதியரசர்கள் எஸ்.என். வரியவா மற்றும் எச்.கே. சேமா ஆகியோர் 18–11–2003 அன்று தீர்ப்பு வழங்கினார்களே, அந்தத் தீர்ப்பைப் பெற்ற ஜெயலலிதா அல்லவா; ஊழலின் ஊற்றுக் கண்ணாக விளங்குகிறார்!

1993–94ஆம் ஆண்டுக்கான வருமான வரி கணக்கை ஜெயலலிதா தாக்கல் செய்ய வில்லை என்று வருமானவரித் துறையே அவர் மீது வழக்கு தொடுத்து – அந்த வழக்கில் 24–2–2006 அன்று ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போதே, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.என்.அகர்வால், ஏ.கே. மாத்தூர் ஆகியோர் "You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can

drag the proceedings?" என்று விமர்சனம் செய்தார்களே, அதை ஜெயலலி தாவே மறந்து விடலாமா? இந்த விமர்சனத் திற்கு ஆளான ஜெயலலிதா அல்லவா; ஊழலின் ஊற்றுக்கண்ணாவார்!

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது அரசுக்குச் சொந்தமான "டான்சி" நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கிய குற்றச்சாட்டிலே அந்த நிலத்தைத் திரும்பவும் ஜெயலலிதா; அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக, நிலப் பத்திரத்தில் உள்ளது தன் கையெழுத்தே இல்லை என்று கூறும் அளவுக்கு ஜெயலலிதா சென்றுள்ளார் என்றும், மனச்சாட்சிப்படி நினைத்துப் பார்த்து ஜெயலலிதா பரிகாரம் தேட வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ். ராஜேந்திரபாபு, திரு.பி.வி. ரெட்டி ஆகி யோர் தீர்ப்புக் கூறினார்களே, இதிலிருந்தே யார் ஊழலின் ஊற்றுக்கண் என்று ஊருக்கும் உலகிற்கும் தெரியுமே!

- ஜெயலலிதாவின் வீட்டைச் சோதனையிட்ட போது கிடைத்த பொருள்களும், அதன் மதிப்பும் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து ஏடுகளிலும் ஒரு பட்டியலாகவே வெளியிடப் பட்டது. அந்தப் பட்டியலில் குறிப்பிட்டவாறு –

• ஜெயலலிதாவின் 86 வகையான நகைகள் மதிப்பு 17 லட்சத்து 50 ஆயிரத்து 31 ரூபாய்.

• சசிகலாவின் 62 வகையான நகைகள் மதிப்பு – 9 லட்சத்து 38 ஆயிரத்து 460 ரூபாய்.

• ஜெயலலிதாவின் 26 வகையான நகைகள் – 19 லட்சத்து 30 ஆயிரத்து 852 ரூபாய்.

• ஜெயலலிதாவின் 41 வகையான நகைகள் – 1 கோடியே 40 லட்சத்து 75 ஆயிரத்து 958 ரூபாய்.

• ஜெயலலிதாவின் 394 வகையான நகைகள் – 3 கோடியே 12 லட்சத்து 67 ஆயிரத்து 725 ரூபாய்.

• சசிகலாவின் 34 வகையான நகைகள் – 17 லட்சத்து 54 ஆயிரத்து 868 ரூபாய்.

• 1116 கிலோ எடையுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் – 48 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்.

• இந்தியன் வங்கி, அபிராமபுரம் கிளையில் முதலீடு – ஒரு கோடி ரூபாய்

- சொகுசு பேருந்து எண் டி.என். 09–எப். 2575 – 32 இலட்சத்து 40 ஆயிரத்து 278 ரூபாய்.

- 91 கைக் கடிகாரம் – 6 இலட்சத்து 87 ஆயிரத்து 350 ரூபாய்.

- 7 விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் – 9 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய்.

- 914 புதிய பட்டுச் சேலைகள் – 61 லட்சத்து 13 ஆயிரத்து 700 ரூபாய்.

- 6195 மற்ற புதிய சேலைகள் – 27 லட்சத்து 8 ஆயிரத்து 720 ரூபாய்.

- 2140 பழைய சேலைகள் மற்றும் துணி மணிகள் – 4 லட்சத்து 21 ஆயிரத்து 870 ரூபாய்.

- 389 ஜோடி காலணிகள் – 2 இலட்சத்து 902 ரூபாய்.

இந்தப் பட்டியலையெல்லாம் மீண்டும் நினைவு படுத்த வேண்டுமென்று நான் எண்ணவில்லை தான்! ஆனால் ஜெயலலிதாதான் இந்தப் பட்டியல்களையெல்லாம்

வெளியிட்டு மக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டுமென்று நம்மைத் தூண்டுகிறார்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில் வெளியிட்ட விவரப்படி எடுத்துக்கொண்டால் 1–7–1991 அன்று ஜெயலலிதாவின் சொத்துக் களின் மதிப்பீடு 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய். 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதல் அமைச்சர். 30–4–1996 அன்று ஜெயலலிதா வின் சொத்துக் களின் மதிப்பு 66 கோடியே 44 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய். எப்படி வந்தது இந்த 66 கோடி ரூபாய் சொத்துக்கள்? ஊழலின் ஊற்றுக்கண் யார்? ஆனாலும் இதுவரை நாம் அவரை இப்படியெல்லாம் விமர்சனம் செய்தது உண்டா?

ஜெயலலிதா கோவையில் மேலும் பேசும்போது, "காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், பிரீமியத் தொகை 2000 கோடி ரூபாய். இதற் கான ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய். இந்த 400 கோடி ரூபாய் ஏஜெண்ட் கமிஷன், யாருக்குச் சென்றுள்ளது? கருணாநிதியிடமா? அல்லது அவரது மகனிடமா? இந்த 400 கோடி ரூபாய் கருணாநிதி குடும்பத்தாரிடம் கொடுக்கப் பட்டிருந்தால் அந்தப் பணம் எங்கே? வருமான வரித் துறை சோதனை நடத்தினால் அவர்களு டைய வீடுகளில் கிடைக்குமா?" என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பத்தி 45இல் "கலைஞர் தலைமையிலான இந்த அரசின் நான்காண்டுச் சாதனைகளின் மணி மகுடமாக கலைஞர் காப்பீட்டுத் திட்டம் திகழ்கிறது என்றால் மிகையாகாது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தில் ஒரு கோடியே 44 லட்சம் ஏழை எளிய குடும்பங்கள் இதுவரை சேர்ந்துள்ளனர். இதுவரை 54,145 பேர் ரூபாய் 165 கோடி மதிப்பிலான உயிர்காக்கும் உயர் சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கு அரசே காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்காக இந்த வரவு செலவு திட்டத்தில் ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு முன்னாள் முதலமைச்சர், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவர் – நிதி நிலை அறிக்கை பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டியவர் – இவ்வளவு அபத்தமாக பிரீமியத் தொகை 2000 கோடி ரூபாய் என்றும், அதிலே ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய் என்றும் ஒரு பொதுக் கூட்ட மேடை யிலே மக்களிடம் கூறி யிருக்கிறார் என்றால் அவர் மக்களை ஏமாற்ற நினைக் கிறாரா அல்லது அவருக்கு தெரிந்ததே இவ்வளவு தானா என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

இத்திட்டத்திற்கான ப்ரீமியத் தொகை 2000 கோடி என்றும் – அதிலே ஏஜெண்ட் கமிஷன் 400 கோடி ரூபாய் என்றும் ஜெயலலிதா கோவையிலே பேசியதை நிரூபிக்க அவர் தயாராக இருக்கிறாரா? அரசின் சார்பில் இத்திட்டத்திற்

கான மொத்த ஒதுக்கீடே 750 கோடி ரூபாய் என்று அரசு அறிவித்திருக்கும் நிலையில், 2000 கோடி ரூபாய் பிரீமியத் தொகை என்றும் 400 கோடி ரூபாய் கமிஷன் என்றும் ஜெயலலிதா சொல்லியிருப்பது எப்படிப்பட்ட புளுகுமூட்டை என்பதை தமிழ்நாட்டு மக்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும். வருமான வரித் துறை சோதனை நடத்த வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார். வருமான வரித் துறைக்கு சொத்து வரி குறித்து கணக்கே தாக்கல் செய்யாமல், அதற்காக நீதிமன்றத்திலே தன்னை விடுவிக்க வேண்டுமென்று மனு போட்டுக் கொண்டிருப் பவர் என்பதால், தன்னைப் போல பிறரும் இருப்பார்கள் என்று அவர் நினைக் கிறாரோ என்னவோ ?

இதய நோய், சிறுநீரக நோய், புற்று நோய் போன்ற நோய்களால் பாதிக்கப்படுபவர் களுக்கு தேவைப்படும் அறுவை சிகிச்சைக் காக அரசு மருத்துவமனை களில் காத்திருப் போரின் எண்ணிக்கை கடந்த காலத்தில் அதிகரித்து வந்தது. அரசு மருத்துவ மனை களுக்கு வரும் ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்று அதிக செலவு செய்து சிகிச்சை பெற இயலாது. மேற்கண்ட ஆபத்தான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவமனைகளில் ஏழை, எளிய நோயாளிகளும் தரமான சிகிச்சை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

அதிலே கூட ஏதோ எனக்கு வேண்டிய ஒரு நிறுவனத்திற்கு அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுவிட்டதாக ஜெயலலிதா ஏற்கனவே ஒருமுறை கூறி, அதற்கு மறுப்பு கூறி விவரமாக பதிலளிக்கப்பட்ட ஒரு பிரச்சினையை மீண்டும் சொல்லியிருக்கிறார்.

அரசாங்கத்தின் விதிமுறைப்படி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த திறந்தவெளி ஒப்பந்தம் கோரப்பட்டு – ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் என்ற நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டதே தவிர – தன்னிச்சையாக ஒருவருக்கு வழங்கப்பட்டுவிடவில்லை.

இந்த நிறுவனம் இந்திய இன்சூரன்ஸ் காப்பீட்டு ஆணையத்தின் விதிமுறைகளின்படி இயங்கும் ஒரு நிறுவனமாகும். இந்த காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த இந்த இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு பிரிமியம் தொகையாக ரூ.569.54 கோடியும் சேவை வரியாக ரூ.58.66 கோடியும் ஆக மொத்தம் ரூ.628.20 கோடி மட்டுமே தரப்பட்டுள்ளது; ஆனால் அ.இ.அ.தி. மு.க. பொதுச் செயலாளர் கோயம்புத்துரில் ரூபாய் இரண்டாயிரம் கோடி அரசுப் பணம் வழங்கப்பட்டுள்ளதாக ஒரு வடிகட்டிய பொய்யை பொதுமக்களை திசை திருப்பும் வகையில் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தில் 14.07.2010 வரை 1,45,054 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இதற்காக இன்சூரன்ஸ்

நிறுவனம் ரூ.394.72 கோடியை காப்பீட்டுத் தொகையாக வழங்கியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் உறுப்பினர் புகைப்படம் எடுத்து அடையாள அட்டை வழங்கும் பணிக்கான செலவினத்தையும் மேற்கண்ட தொகையி லிருந்து இன்சூரன்ஸ் நிறுவனம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு நான் காண்டு களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை அளிக்க அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால் ஜெயலலிதா இத்திட்டத்தையே தவறு என்கிறாரா? ஏழையெளிய மக்களின் அறுவை சிகிச்சைக்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்கு வதை கூடாது என்கிறாரா? இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்ற – பயன்பெறும் தமிழ் நாட்டு மக்கள்தான் ஜெயலலிதாவின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். ஜெய லலிதா ஆட்சியிலே இத்தகைய திட்டத்தை மேற்கொண்டது உண்டா என்றால் இல்லை, இல்லவே இல்லை! அவரும் நிறைவேற்ற வில்லை, தற்போது நிறைவேற்று வதையும் கெடுக்கப் பார்க்கிறார் என்றால் அத்தகைய வரின் உள்நோக்கத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முரசொலி
17.07.2010

அன்புள்ள,
மு.க.

உடன்பிறப்பே,

ஜெயலலிதா எப்போதுமே ஒரு "அவசரக் குடுக்கை" என்பார்கள். அது சரியாகத்தான் இருக்கிறது. தான் சொன்ன குற்றச்சாட்டுக்கு பதில் வந்திருக்கிறதா? அப்படி பதில் வந்தால் என்ன பதில் வந்திருக்கிறது? தான் சொன்னது சரிதானா என்றெல்லாம் பார்க்காமல் – என்னுடைய பதில்கள் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களாக வந்து கொண்டிருக்கும் நிலையில்; விலைவாசி உயர்வு பற்றி அவர் கோவையிலே பேசியதற்கு நீண்ட விளக்கத்தை நான் 16ஆம் தேதியே அளித்த பிறகும் – விலைவாசி பற்றி பேசியதற்கு கருணாநிதி வாய் திறக்கவில்லை, ஆகவே நான் கூறியது உண்மையாகி விட்டது என்றெல்லாம் புலம்பித் தள்ளியிருக்கிறார்.

தமிழ்நாடு வளர்ச்சி அடைந்தது என்பதற்கு உதாரணமாக பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பெருகியிருப்பதை மட்டுமே நான் காட்டிடாமல், எந்த அளவிற்கு பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் பெருகியிருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறேன். நுனிப்புல் மேயும் ஜெயலலிதாவும், அவரது ஆதரவு ஏடுகளும் அவைகளையெல்லாம் படிக்கவில்லை போலும்! புதிய கல்லூரிகள், பள்ளிகள், மாவட்டங்கள் ஏற்படுத்துவ தெல்லாம் சாதனை அல்ல என்று சொல்லுகிறார் ஜெயலலிதா. அவரது

ஆட்சிக் காலத்தில் அவர் இவ்வாறு தொடங்கியிருந்தால், அதனைப் புள்ளி விவரத்தோடு குறிப்பிட்டு, கழக ஆட்சியைவிட அ.தி.மு.க. ஆட்சியிலே அதிகமாகச் செய்தோம் என்று சொல்வதற்கு அவர்களிடம் "மசாலா" இல்லாதபோது அறிக்கை என்ன கேடு?

16ஆம் தேதி நான் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப் பகுதி முழுவதும் உரம் பற்றித்தான் எழுதியிருக்கிறேன். ஆனால் உரம் பற்றி நான் வாய் திறக்கவில்லை என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே நேற்று சொல்லியிருக்கிறார் என்றால் அவரைப் பற்றி என்ன நினைப்பது?

ஜெயலலிதா மேலும் தனது கோவை உரையிலே கழக ஆட்சியில் அரிசி பதுக்கல், கடத்தல் என்றெல்லாம் முழங்கியிருக்கிறார். ஜெயலலிதாவின் ஆட்சியில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955ன் கீழ், 2001 முதல் 2006 ஏப்ரல் மாதம் வரை ஐந்தாண்டுகளில் மொத்தம் 34,308 வழக்குகளும், 3,313 கைது நடவடிக்கைகளும், 1,492 வாகனக் கைப்பற்றுதலும், 67 நபர்கள் மீது தடுப்புக் காவல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2004ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளிலிருந்து 251 நபர்கள் கைது செய்யப்பட்டதில் ஒருவர் மீது மட்டும் கள்ளச்சந்தை தடுப்புக் காவலின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு ஜெயலலிதா ஆட்சியிலே பதுக்கல் காரர்கள் மீதும்,

கடத்தல்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது கழக ஆட்சியில் 2006 முதல் 2010 ஜூன் மாதம் முடிய மொத்தம் 58,807 வழக்குகளும், 13,311 கைது நடவடிக்கைகளும், 4,728 வாகனக் கைப்பற்றுதலும், அதில் 453 வாகனங்களின் உரிமத்தை ரத்து செய்யவும், 270 ஓட்டுநர் உரிமங்களை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆன்–லைன் வர்த்தகம் பற்றி பேசியுள்ள ஜெயலலிதா அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற பொருள்களை விற்பனை செய்வதாகவும், அந்த அபாயத்தைக் கட்டுப்படுத்த கழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவர்களைப் பாதுகாப்பதற்கு பல காரணங்கள் உண்டு என்றும் பேசியிருக்கிறார். ஆன் லைன் வர்த்தகத்தின் மூலமாக எந்தெந்தப் பொருள் களை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட் டுள்ளது என்ற அடிப்படை கூட அவருக்குத் தெரியவில்லை. ஜெயலலிதா குறிப்பிட்டுள்ள இந்த மூன்று பொருள்களுமே ஆன்–லைன் வர்த்தகம் மூலமாக தற்போது விற்பனை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அதுமாத்திரமல்ல, அந்த வர்த்தகர்களை நான் ஏதோ பாதுகாப்பதாக வும், அதற்கு ஏதோ காரணம் இருப்பதாகவும் ஜெயலலிதா புளுகியிருக்கிறார். உண்மை என்னவென்றால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் ஆன்–லைன்

வணிகத்திற்கு ஆட்சேபணை தெரிவித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 14.03.2007ல் நான் அதிகார பூர்வமாகவே அறிவித்திருக்கிறேன். அதற்குப் பிறகுதான் பாசுமதி அரிசி தவிர பிற அரிசி வகைகளும், கோதுமையும், துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும் 2007 முதல் ஊக வணிகத்தின் மூலம் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட பொருள்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. இந்த விவரங்கள் எதுவும் தெரியாமல், ஏதோ வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற பாணியில் எழுதிக் கொடுத்தவன் ஏட்டைக் கெடுத்தான் என்று அம்மணியார் கோவையில் புளுகியிருக்கிறார்.

காலாவதி மருந்து பற்றியும் ஜெயலலிதா கோவையிலே பேசியிருக்கிறார். காலாவதி மருந்து பற்றி சட்டப் பேரவையிலேயே விளக்க மாகப் பதில்கள் சொல்லப்பட்டு – அது குறித்து வழக்கும் பதிவு செய்யப்பட்டு – குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த காலத்திலிருந்து காலாவதியான மருந்துகளின் முகப்புச் சீட்டுகளை மாற்றி மீண்டும் விற்பனைக்கு அனுப்பும் செயலில் ஈடுபட்டுவந்த ஒரு கும்பலை இந்த கழக அரசுதான் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தது. இந்தச் செயலில் ஈடுபட்ட 40 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் 19 நபர்கள் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கை மேலும் விசாரிக்க குற்றப்பிரிவு புலனாய்வுத்துறைக்கு இந்த வழக்கு

மாற்றப்பட்டுள்ளது. இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டிருந்த 8 மொத்த மருந்து நிறுவனங்களின் மருந்து உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் சில நிறுவனங்களின் மருந்து உரிமங்களை இரத்து செய்ய மருத்துக் கட்டுப்பாடு இயக்குநர் நடவடிக்கை எடுத்துவருகிறார். இந்த நிலையில் போலி மருந்து மற்றும் காலாவதி மருந்துகளின் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் மரணமடைந்ததாக ஒரு தவறான தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா தனது பேச்சில், தமிழகத்தில் 42 ஆயிரம் மருந்துக் கடைகள் உள்ளன என்றும், அவைகளைச் சோதனை செய்ய அரசு சார்பில் 52 மருந்து ஆய்வாளர்கள் மட்டுமே உள்ளதாகச் சொல்லியிருக்கிறார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் எத்தனை மருந்து ஆய்வாளர்கள் இருந்தார்கள்? தற்போது அவர்களின் எண்ணிக் கையை இந்த அரசு குறைத்து விட்டதா என்பதை ஜெயலலிதா சொல்லத் தயாரா? ஸ்டாலினின் மருமகன் பற்றி அவர் கூறிய குற்றச்சாட்டிற்கு நான் பதில் அளிக்க வில்லையாம், அதனால் அதை நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்கிறார் ஜெயலலிதா. அதற்குள் அவசரப்படு கிறார் அம்மா! ஸ்டாலினின் மருமகன் மீது ஜெயலலிதா கூறிய புகாருக்கு அவரே அந்த அம்மையாருக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்.

மின்சாரப் பிரச்சினை குறித்தும் நான் பதில் சொல்லவில்லை என்கிறார் ஜெயலலிதா. அவர் தான் அரைத்த மாவையே அரைத்துக் கொண் டிருக்கிறார் என்றால், எத்தனை முறை தான் நாம் பதில் சொல்வது? இந்த அரசின் சார்பில் மின்சாரப் பிரச்சினை குறித்து விளக்கமளிக்கப் பட்டு விட்டது. அவரது ஆட்சியில் மின்சாரம் உபரியாக இருந்தது என்றும், தற்போது பற்றாக்குறையாக உள்ளது என்றும் முக்கியமாக சொல்லியிருக்கிறார். அதற்குக் காரணம், தற்போது கழக ஆட்சியிலே புதிது புதிதாக தொழிற்சாலைகளை ஏற்படுத்தியதன் காரணமாக தொழில் வளம் பெருகி, மின்சாரத் தேவை அதிகமாகியுள்ள காரணத்தால், அந்தப் பற்றாக்குறையையும் ஈடுகட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் திட்டவட்டமாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா தனது பேச்சில் மணல் கொள்ளை நடைபெறுவதாக நீண்ட நேரம் பேசியிருக்கிறார். ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலேதான் தமிழக அரசே மணல் குவாரிகளை எடுத்து நடத்தும் என்று 2003ஆம் ஆண்டில் அறிவித்து நடைமுறைப்படுத்தினார்கள். அதே நடைமுறைதான் தற்போதும் பின்பற்றப்படுகிறது. மணல் வியாபாரம் மூலமாக தனது ஆட்சியிலே ஆறுமுகசாமிகள் கப்பம் கட்டியதை மறந்து விட்டு, ஆதாரம் எதுவுமில்லாமல் தற்போதும் அப்படி நடக்கும் என்ற யூகத்தின் அடிப்படையில் கோவையிலே பேசியிருக்கிறார்!

அரசின் தோல்விகளையும், சாதனைகளையும் கணக்குப் போடுவதற்கான நல்ல தருணம் இது தான் என்றும், இந்த அரசின் சாதனைகள் என்று சொல்லக் கூடியவை மிகக் குறைவு என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்த நான்காண்டு காலத்தில் செய்யப்பட்ட ஒரு சில சாதனைகளை மட்டுமே இங்கே பட்டியலிடுவோம். அதற்குப் பிறகும் இந்தச் சாதனைகள் எல்லாம் "மாயத் தோற்றங்கள்" என்று ஜெயலலிதா கூறுகிறாரா ?

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி; விவசாயி களுக்கு குறைந்த பயிர்க் கடன் வட்டி –பயிர்க் காப்பீட்டுத் திட்டம் – 31 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் – நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் – இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் – மாணவ மாணவி யருக்கு சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டைகள்; வாழைப்பழங்கள் – பள்ளி, மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் ரத்து – செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னையில் அமைப்பு – திருமணத் திட்ட நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பது 25 ஆயிரம் ரூபாயாக உயர்வு – ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாய் – "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" – 108 சேவைத் திட்டம் – இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு – அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு – சமத்துவபுரத் திட்டம் – மெட்ரோ ரயில் திட்டம் – ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் – ராமனாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் –

மதுரவாயல், சென்னைத் துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் – "கலைஞர் வீட்டுவசதித் திட்டம்" என்பன போன்ற திட்டங்கள் எல்லாம் ஜெயலலிதாவின் அகராதியில் சாதனைகள் இல்லையா? கொள்ளையடித்த பூதத்தை கொஞ்ச நாள் அனுமதித்து விட்டு, இந்தப் பூதம் கூண்டோடும், கூட்டோடும் கொடநாடு குகைக் குள்ளே அடைபட்டுக் கிடக்கச் செய்ததும் சாதனைகளில் ஒன்றுதானே?

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு பற்றியும் ஜெயலலிதா கோவையிலே பேசியிருக்கிறார். அந்த மாநாடு வசூல் செய்வதற்காகத்தான் நடத்தப்பட்டது என்றும், அந்த மாநாட்டிற்காக தமிழ்நாடு முழுவதும் 2000 கோடி ரூபாய் தி.மு.க. வினரால் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறார். கோவையில் நடைபெற்ற மாநாட்டிற்காக எந்தத் தனியாரிடமோ, நிறுவனங்களிடமோ நிதி வசூலிக்கக் கூடாதென்று முடிவெடுத்து, முழுச் செலவையும் அரசாங்கத்தின் மூலம்தான் செய்யப்பட்டது.

தமிழ் பெயரைச் சொல்லி எனது குடும்ப கஜானாவை நிரப்பி விட்டதாகவும் ஜெயலலிதா சொல்கிறார். அவருக்கு எதை எடுத்தாலும் நிதி வசூல், ஊழல், கஜானாவை நிரப்பிக் கொள்ளுதல் என்ற நினைப்புதான். அமெரிக்கா விலிருந்து

வந்த 3 லட்சம் டாலரை தன் கஜானாவில் நிரப்பிக் கொண்டதைப் போலவும் – யாருக்கோ சொந்தமான கொடநாடு எஸ்டேட்டை எப்படியோ கைப்பற்றிக் கொண்ட தைப் போலவும் – எண்ணிக் கொள்கிறார். 2000 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்ட தென்றால், ஜெயலலிதா உண்மையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் என்றால், பொறுப்போடு அந்த நிதி யார் யாரிடமிருந்து என்னால் வசூலிக்கப்பட்டது, அதற்கு என்ன ஆதாரம், என்று நிரூபிக்கத் தயாரா ?

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை அமல்படுத்த ஒரு துரும்பைக் கூட நான் கிள்ளிப் போடவில்லை என்றும் ஜெயலலிதா சொல்லி யிருக்கிறார். நடுவர் மன்றம் தன் இறுதி அறிக்கையை 05.02.2007 அன்று அளித்த பிறகு 19.02.2007, 05.04.2007 ஆகிய தேதிகளில் நடந்த அனைத்துக்கட்சிக் கூட்டங்களில் எடுத்த முடிவின்படி, பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டம் பிரிவு 5 (3)–ன் கீழ் காவிரி நடுவர் மன்றத்தில் மேல் விளக்கம் கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன் றத்திலும் சிறப்பு முறையீட்டு மனு ஒன்றை 05.05.2007 தேதி அன்று தாக்கல் செய்துள்ளது. கேரளம் மற்றும் கர்நாடக அரசுகளும் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்சநீதிமன் றத்தின் சிறப்பு முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

மேலும் நடுவர் மன்றத்திலும் இறுதி ஆணை யில் விளக்கங்கள் கோரி பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டப் பிரிவு 5(3)–ன்படி எல்லா மாநில அரசுகளும் மத்திய அரசும் மனுக்கள் தாக்கல் செய்துள்ளன. காவிரி நடுவர் மன்றம் 10.07.2007 அன்று, தற்போது காவிரி வழக்கு சிறப்பு முறையீட்டு மனுக்கள் (SLPs) மூலம் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு, உச்சநீதிமன்றம் இம்மனுக்களை அனுமதித்துள்ளதாலும் அவை உச்சநீதிமன்றத் தில் நிலுவையில் உள்ளதாலும், உச்சநீதிமன்றத் தில் இம்மனுக்கள் விசாரிக்கப் பட்டு, ஆணை பிறப்பித்த பின்தான், அவர்களிடம் மேல் விளக்கங்களைக் கோரி தாக்கல் செய்துள்ள 5 (3) மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறியது.


உச்சநீதிமன்றத்தில் உள்ள மனுக்கள் விசாரிக் கப்பட்டு ஆணை பிறப்பித்த பின்தான், நடுவர் மன்றம் பன்மாநில நதிநீர்த் தாவாச்சட்டப் பிரிவு 5(3)–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக் களை விசாரித்து மேலும் ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்பும். மேற்கண்ட நடவடிக்கைகள் எல்லாம் முடிந்த பின்னர்தான் பன்மாநில நதி நீர்த் தாவாச்சட்டப் பிரிவு 6(1)–ன்படி மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் பதிப்பிக்கும். அந்த ஆணை படுகை மாநிலங்களை கட்டுப்படுத்தும். இதுவே நடைமுறையில் உள்ள சட்டமாகும். அதுவரை ஏற்கனவே 25.06.1991 ல் பெறப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்திரவு நடைமுறையில் இருக்கும். இவ்வழக்கு 29.09.2009

அன்று விசாரணைக்கு வந்தபோது உச்சநீதி மன்றம் இதை டிசம்பர், 2009 முதல் வாரத்திற்கு ஒத்தி வைத்தது. ஆனால், இதுவரை இவ்வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. உச்ச நீதி மன்றத்தில் காவிரி தொடர்பான சிறப்பு முறையீட்டு மனுவில் வழக்காட, கர்நாடக மாநிலம் 25 தொகுப்பில் அதன் ஆவணங் களையும், கேரளா 15 தொகுப்பில் ஆவணங் களையும் தாக்கல் செய்துள்ளன. அவைகளுக்கு தேவையான கூடுதல் ஆவணங்களை வழக்கறி ஞர்களுடன் ஆலோசித்து தமிழ்நாடு சார்பிலும் 13 தொகுப்புகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 06.05.2010 அன்று தமிழக வழக்கறிஞர்கள் தலைமை நீதிபதி அமர்வின் முன் இவ்வழக்குப் பற்றி கவனத்திற்கு கொண்டுவந்தபோது நீதிமன்றம் இவ்வழக்கை ஆகஸ்டு முதல் வாரத்திற்கு ஒத்தி வைத்துள்ளது. இதை யெல்லாம் மறைத்து விட்டு நான் துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை என்று ஜெயலலிதா சொல்கிறார் என்றால் அவர் எப்படிப்பட்ட புளுகுணி என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் எடை போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஜெயலலிதா எப்படிப்பட்டவர் என்பதற்கு இறுதியாக ஒன்றைக் கூறி முடிக்க விரும்பு கிறேன். ஐந்து முறை தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்த என்னை – இன்று வரை ஒரு தெரு வீட்டில் (Street House) அதாவது பத்து வீடுகளோடு இணைந்த ஒரு வீட்டில், அதுவும் நான் முதல் அமைச்சராக வருவதற்கு முன்பு வாங்கப்பட்ட அதே வீட்டில் – தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற என்னைப் பற்றி – "டிக்கெட்

இன்றி, சட்டைப் பாக்கெட்டில் பணம் இன்றி, திருவாரூரிலிருந்து திருட்டு ரயில் ஏறி வந்தவர் என்று தன்னைப் பற்றிதானே கூறிக்கொண்ட ஒரு மனிதர், அரசியல் மூலம் இவ்வளவையும் சம்பாதித்து இருக்கிறார்" என்று பேசியிருக் கிறார் என்றால் அவரைப் பற்றி தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ளவேண்டும். திருட்டு ரயில் ஏறி வந்தவன் நான் என்று எப்போதும் நான் கூறிக் கொண்டதில்லை. நான் சென்னைக்கு வருவதற்கு முன்பே ஈரோட்டில் தந்தை பெரியாரின் "குடியரசு" அலுவலகத்தில் துணை ஆசிரியனாகப் பணியாற்றி, பின்னர் கோவையிலும், சேலத்திலும் திரையுலகிலே சேர்ந்து பல திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதி, சம்பாதித்து அதன் பின்னர்தான் சென்னைக்கே வந்தேன். என்னுடைய பேனாவினால் நான் எழுதிக் குவித்த திரைப்படங்கள் மூலமாக, ஏராளமான நூல்கள் வாயிலாக நான் சம்பாதித்தேன். அவற்றிலிருந்து பொது நலன்களுக்காக நிதியும் வழங்கி வருகிறேன். ஆனால் ஜெயலலிதா என்னைக் கேட்பதைப் போல; வேறு யாராவது ஜெயலலிதாவைப் பார்த்து நீ எப்படி இவ்வளவு சொத்துக்களையும் சம்பாதித்தாய், நடிப்பின் மூலமாக மட்டும் இத்தனை சொத்துக்களையும் சம்பாதிக்க முடியுமா என்று கேட்டுவிட்டால் அவர் என்ன பதில் சொல்வார் ?

முரசொலி
18.07.2010



அன்புள்ள,
மு.க.